RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s254

# சித்தர் பாடல்களில் இறையும் இறைநெறியும்

வா. சித்ரா [அ, *]

[அ] தமிழ்த்துறை, இரத்னவேல் சுப்ரமணியம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சூலூர், கோயம்புத்தூர்-641402, தமிழ்நாடு, இந்தியா

# Theology and Morality in Siddha Songs

V. Chitra [a, *]

[a] Department of Tamil, Rathnavel Subramaniam College of Arts and Science, Sulur, Coimbatore-641402, Tamil Nadu, India

* Corresponding Author: chitra.v@rvsgroup.com

Received: 23-08-2022
Revised: 05-11-2022
Accepted: 22-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

The Siddhas' assertion is that man is a part of nature, from which man cannot be separated, and that there is a dialectical relationship between nature and man. The appearance, style, dress, and actions of the Siddhas exemplify their doctrines. Siddhas say that the trick is to gain wisdom by engaging in activities and to know God beyond the soul hidden by ignorance. The theology of the Siddhas centered on human society and their divinity centers human activities.

**Keywords:** Siddhas, Divinity, Human Society, Human Activities

## முன்னுரை

இறை உணர்வு என்பது தனிமனிதனைச் சார்ந்த ஒன்றாகும். தனிமனிதனைச் சார்ந்த அவ்வுணர்வு அல்லது அந்நம்பிக்கை, தனிமனிதர்கள் பலர் சேர்ந்த சமுதாயத்தின் மீது அழுத்தமான பாதிப்பை ஏற்படுத்துகின்ற ஒன்றாக உள்ளது. மனிதர்கள் பலர் ஒரு குறிப்பிட்ட இறைக் கொள்கையை அல்லது சமயக் கொள்கையைக் கொண்டிருக்கும்போது அது ஒரு சமுதாய நெறியாக மாறிவிடுகிறது. மதம் அல்லது சமயம் ஒரு சமுதாய அமைப்புதான் என்பதை, "குடும்பம் தொடங்கி அரசு வரை சமுதாய அமைப்புகள் பல இருக்கின்றன. மதம் என்பதும் அத்தகைய அமைப்புகளுள் ஒன்றே. பிற சமுதாய அமைப்புகள் உலகியல் தேவைகளை நிறைவு செய்வதற்காக உருவாக்கப்பட்டன. மதம் என்ற அமைப்பு உலகியல் கடந்த ஓர் அனுபவத்தை நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. உலகியல் கடந்த இவ்வனுபவத்தை முக்தி நிலை என்பர்" என்று நாராயணன் தெளிவுப்படுத்துகிறார் (Kamalakannan, 2000).

உலகியல் கடந்த ஓர் அனுபவத்தைத் தனிமனிதர் ஒவ்வொருவரும் உணரச்செய்யும் விதமாக உருவான தேசமய நிறுவனம். மனித சமுதாயத்தை நன்னெறிப்படுத்தியும் ஒருமைப்படுத்தியும் இறை நம்பிக்கையை ஊட்டியும் அவ்வனுபவத்தை உணர வைத்திடும் பணி அதனுடையது ஆகும். அதற்காக அன்பையும் ஒழுக்கத்தையும் அடிப்படையாகக் கொண்ட பக்திநெறியை வளர்த்தது சமயம். இதில் பலவிதமான சடங்குகளும் சம்பிரதாயங்களும் சாத்திரங்களும் உருவாயின. இறையனுபவம் பெறுவதற்காக ஏற்பட்ட சமயங்கள் பிற்காலத்தில் பூசல்களுக்கும் பிரிவினைகளுக்கும் மூடத்தனங்களுக்கும் உரிய இடமாகிவிட்டன. இதனால் சமுதாயத்தில் அன்பும் ஒழுக்கமும் குன்றிப்போய் அறியாமையும், ஆணவமும் உண்டாகியது. அதனால் போலி குருக்களும்

பொய்யுரைகளும் நிறைந்து மதம் சமுதாயத்தைச் சீரழித்தது. இந்நிலையில் ஆங்காங்கே இருந்த சித்தர்கள் சமயப் போலிகளைக் கடிந்தும், உண்மை நெறிகளை எடுத்துரைத்தும் சமுதாயச் சீர்த்திருத்தப் பணியாற்றினர். இப்போக்கு அவர்களின் பாடல்களிலும் வெளிப்பட்டன. "சித்தர்கள் சமுதாயத்திற்குச் செய்த மிகப்பெரிய தொண்டு ஒன்று உண்டு என்றால் அது கடவுள் பற்றிய கொள்கையை விளக்கியது ஆகும். ஆலயங்களில் மட்டும் இறைவன் இருப்பதாக எண்ணிக் கொண்டிருந்த காலத்தில் கண்மூடித்தனமான சம்பிரதாயங்களில் தமது பொழுதையும் பொருளையும் விரயம் செய்து வந்த காலத்தில் மிக அரிய கொள்கையை உலகுக்கு உணர்த்தினார்கள்" என்ற கூற்று இதனை உறுதிசெய்வதாகும் (Manikkavasagam, 1998).

## இறைநெறி - சொற்பொருள் விளக்கம்

கடவுள் பற்றிக் குறிப்பதற்குத் தமிழில் பல சொற்கள் உள்ளன. தொல்காப்பியர் காலத்தில் கடவுள் என்னும் சொல் தேவர்களையே குறிப்பதாக இருந்துள்ளது. "கடவுள் என்ற சொல்லுக்கு எல்லாவற்றையும் கடந்து நிற்பது என்று இப்பொழுது பொருள் கொள்கின்றோம். சிந்தை, சொல், செயல்களுக்கு அப்பாற்பட்டதே கடவுள் என்று கருதுகின்றோம். தொல்காப்பியர் காலத்தில் கடவுளர், கடவுள் என்ற சொற்கள் தேவர்களையே குறித்து வந்தன" என்று சாமி சிதம்பரனார் கூறுகிறார். கடவுள் வாழ்த்து என்பதற்கு அமரர் வாழ்த்து என்பதே பொருள் ஆகும் (Sami Sidambaranar, 2001).

ஞானிகளும் யோகிகளும் நீக்கமற எங்கும் நிறைந்திருப்பதும் அழிக்க முடியாததும் முதலும் முடிவுமாகியதுமான ஒன்றினை பல்வேறு சொற்களால் குறிப்பிட்டுப் புகழ்ந்துள்ளனர். அப்பொருள் சொல்லுக்குள் அடங்காத தன்மையையும் சொற்கடந்து நிற்கும் தன்மையையும் உணர்த்தியுள்ளனர். அவர்கள் குறிக்கும் சொற்கள் பலவும் அப்பொருளின் இயல்பையும் வடிவத்தையும் செயலையும் எடுத்துரைப்பனவாகவே உள்ளன. கடவுள் என்னும் சொல்கூடகடுஉள் எனப் பிரிந்து வினைச்சொல்லாக நின்று அப்பொருளின் செயல் தன்மையைக் குறிப்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

இறைமை என்பது இறையின் பண்பைக் குறிப்பதாகும். இறைமைப்பேறு என்பதும் இறைத்தன்மை எய்துவதைக் குறிப்பதையும் கருத வேண்டும். இறையும் இறைமையும் ஒன்றே ஆகும். கழகத் தமிழ் அகராதி இறைமை என்பதற்குத் தலைமை, தெய்வத்தன்மை, அரசாட்சி என்று பொருள் கூறுவதும் இங்கு கருத்தில் கொள்ளத்தக்கதாகும்.

நெறி என்பது வழி என்று பொருள்படும். நீதிவழி நடப்பதை நீதிநெறி என்று உரைப்பது நோக்கத்தக்கது. இறைநெறி என்பது இறையாற்றல் இயங்கும் முறையைக் குறிக்கின்றது. இறைமைப் பேறு என்பது இறையின் இயக்கத்துடன் ஒன்றிணைந்து வாழ்கின்ற பேறு ஆகும். அதற்கு இறையாற்றலை உணர்தல் அவசியமாகும். அவ்விறையாற்றலை உணர்வதே இறையுணர்வு என்றும் மெய்யுணர்வு என்றும் குறிக்கப்படுகிறது. இறையை ஒட்டியும் ஒருங்கிணைந்தும் வாழும் வாழ்க்கை முறையே இறைநெறி வாழ்க்கை ஆகும்.

எனவே இறை என்பது எங்கும் நிறைந்துள்ளதும், இயற்கையைக் கடந்து நிற்பதும், உள்ளுணர்வால் உணரக்கூடியதும் முழுமுதற் பொருளாக இருப்பதும் அறிவும் ஆற்றலும் ஒன்றிணைந்துள்ளது மான ஒன்றாகக் குறிக்கப்படுகின்றது. அவ்வாற்றல் இயங்கும் வழியும் அவ்வியக்கத்தோடு மனிதர் ஒன்றிணைந்து செல்லும் வாழ்வும் இறைநெறியாகக் கொள்ளப்படுகிறது. இவ்வகையில் சித்தர் பாடல்களின் இறைநெறியை ஆராயும் முகத்தான் இங்கு இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

## சித்தர் பாடல்களில் இறைநெறி வெளிப்படும் முறைகள்

சித்தர் பாடல்களில் இறை, இறைநெறி பற்றிய கருத்துக்கள் இருவித முறைகளில் வெளிப்படுகின்றன. ஒன்று உடன்பாடானது. மற்றொன்று எதிர்மறையானது. கடவுள் உண்டு என்பதையும் ஒரே கடவுள் என்பதையும் உடன்பாடாகக் கூறும் சித்தர் பாடல்கள் இவற்றிற்கு மாறாகச்

சமுதாயத்தில் உள்ள கருத்துக்களையும் நிகழ்வுகளையும் எதிர்மறையாகக் கூறிச்சாடுகின்றன. வேதங்களையும் ஆகமங்களையும் மறுத்துரைப்பதனால் சித்தர்களை நாத்திகர்கள் என்றோ, உலகாயதர்கள் என்றோ கூறிவிட முடியாது. சித்தர் பாடல்களில் உலகாயதம் சார்ந்த கருத்துக்களும் உண்டு. மக்கள் வாழ்வுக்குப் பயன்படும் சமயம் சார்ந்த அறக்கருத்துக்களும் உண்டு. சமயங்களையும் சமய நூல்களையும் மறுத்துரைக்கும் சித்தர்கள் கடவுள் உண்டு என்னும் கொள்கையில் உடன்பாடுடையவர்களே ஆவர். அதே நேரத்தில் கடவுள் உண்டு அல்லது இல்லை என்பதில் அவர்கள் விவாதித்துக்கொண்டு நேரத்தை வீணாக்காமல் எல்லாம் வல்ல இறையாற்றல் எங்கும் இருப்பதை உணர்ந்து அதனை அனுபவிக்கவே செய்தனர். அதற்கான வழிகளையும் மக்களுக்குக் காட்டினர்.

இறையின் இயல்பை எடுத்துரைப்பது இறையுணர்வு பெறுகின்ற அனுபவத்தைப் பற்றிக் கூறுவது, இறையுணர்வு பெறுவதற்கு உடலின் இன்றியமையாமையையும் உடல் பற்றிய பல செய்திகளையும் விவரித்துரைப்பது, இறையுணர்வு பெறுவதற்கான வழி மற்றும் பயிற்சி முறைகளைப் பற்றி விளக்குவது, குருவின் அவசியத்தை உணர்த்துவது என இறைநெறியின் பல செய்திகளைச் சித்தர்களின் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. இவற்றுடன் சித்தர் பாடல்களின் இறைக்கொள்கையில் சமூகத் தீமைகளைச் சுட்டிக்காட்டுதல் முக்கியமான இடத்தைப்பெறுகிறது. இறையை உணர்வதற்குச் சமூகத்தில் உள்ள தடைகளைச் சித்தர் பாடல்கள்பலவும் எடுத்துரைக்கின்றன. இறைமையின் இயல்பை எடுத்துரைக்கும் போது அவ்வுண்மையைச் சித்தர்களின் பாடல்கள் நேரடியாக வெளிப்படுத்தி நிற்கின்றன. அதுபோலக்கடவுளைப் பற்றி சமுதாயத்தில் நிலவும் தவறான கருத்துக்களைச் சாடல்களாக எதிர்மறை நிலையிலும் வெளிப்படுத்துகின்றன. இறைமை எய்துவதற்கான வழியைச் சுட்டுமிடத்துச் சரியான வழியை உடன்பாடாகக் கூறுவதுடன், சமுதாயத்தில் நிலவும் தவறான, மூடத்தனமான வழியைச் சுட்டிக்காட்டிக்கடியும் போக்கும் இதில் உள்ளது. இவ்விரு போக்குகளும் ஒரே இடத்தில் இருப்பதால் சித்தர்களின் நெறியைப் புரிந்து கொள்வது குழப்பமான ஒன்றாகத் தோன்றுகிறது. ஆனால், ஒருபக்கமாகத் தங்கள் கருத்துக்களைக்கூறிச் செல்லாமல் தங்கள் கருத்திற்கு மாறாகச் சமூகத்தில் நிலவிவரும் கடவுள் கொள்கைகளைச் சுட்டிக்காட்டி மறுத்திருப்பது அவர்களின் நெறியைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு வழிவகுக்கிறது.

## இறை இயல்பை எடுத்துரைத்தல்

இறை, இறைவன் என்பது பொறி கடந்த ஒன்றாகக் கொள்ளப்படுகிறது. இது சொற்களால் விளக்க முடியாத தன்மைத்துவம், உள்ளுணர்வால் அறியப்படக் கூடியதுமாகும். இறையை உணர்வதில் ஒவ்வொருக்கும் ஒவ்வொருவிதமான அனுபவம் இருக்கிறது. தனிமனிதனின் அனுபவத்திற்கு ஏற்ப அவ்வனுபவத்தை எடுத்து உரைக்கும் முறையிலும் சில மாற்றங்கள் இருக்கின்றன. காலத்திற்கேற்பவும் கருத்து வளர்ச்சிக்கு ஏற்பவும் இறைமையை எடுத்து விளக்கும் முறைகளும் மாறுபடுகின்றன. இதனால் இறைக் கொள்கைகளும் உலகில் பலவாகப் பெருகி வளர்வதற்கு வாய்ப்புகள் ஏற்பட்டுவிட்டன.

சித்தர்கள் அனைவரும் ஒரேவிதமான இறைக்கொள்கை உடையவர்கள் என்று கொள்வதற்கில்லை. அவர்களின் இறைபற்றிய கருத்து விளக்கங்களில் நுண்ணிய வேறுபாடுகள் சில இருக்கின்றன. சித்தர்கள் ஒவ்வொருவரின் இறையனுபவத்தினாலும் சொற்களில் அவர்கள் எடுத்துரைக்கும் முறைகளினாலும், அவர்கள் வாழ்ந்த காலத்தின் சமூகச் சூழ்நிலைகளினாலும், தொடக்காலத்தில் பழகிவந்த சமய நெறிகளினாலும் அவை மாறுபட்டுத் தெரிகின்றன. இதனாலேயே சித்தர் பாடல்களில் காணப்படும் இறைக்கொள்கையில் இருவிதமான போக்குகள் காணப்படுகின்றன. சித்தர்கள் சமய நெறி முறைகள் பலவற்றை எதிர்த்திருக்கிறார்கள். சில சித்தர்கள் சமய கருத்துக்களை ஒட்டியும் கருத்துரைத் திருப்பதும் சித்தர் பாடல்களில் தெரிகிறது. அதேபொழுது சித்தர்கள் அனைவரும் வரையறைக்குட்பட்ட குறிப்பிட்ட ஏதேனுமொரு சமய நெறிக்குள்நின்றோ, சித்தாந்தம் அல்லது தத்துவங்களில் நின்றோ தங்கள் கருத்துக்களைச் சொன்னதில்லை. அவர்களின் பாடல்களும் குறிப்பிட்ட சித்தாந்தத்தையோ அல்லது தத்துவத்தையோ விளக்கும் விளக்கவுரைகளும் அல்ல. அவை அவர்களின் அனுபவத்தின் வெளிப்பாடுதான். சித்தர்களைப் பொறுத்த மட்டில் இறைமையை அறிய ஒருவருக்கு

வழிகாட்டத்தான் முடியும். உணர்ந்து அறிவது என்பது அவர்களின் அனுபவத்தினாலே தான். இறையனுபவத்தைச் சொற்களில் விளக்குவது என்பது கடினம். இந்நிலையில் சித்தர்கள் அனுபவித்துச் சொல்லிய இறையனுபவத்தை இறையை அனுபவத்தறியாத ஓர் அறிவைக் கொண்டு விளக்குவது கடினமாகும். அனைத்துச் சித்தர் பாடல்களிலும் திரும்ப திரும்ப வரும் சொற்கள், தொடர்கள் மூலம் சித்தர்கள் இறை பற்றி பொதுப்படஉரைக்கின்ற பொதுவான இறைக்கொள்கையை உணர முடிகிறது.

இறை, நீக்கமற எங்கும், எல்லாப் பொருள்களிலும் நிறைந்திருப்பதையும் அதன் அழியாதத் தன்மையையும் சித்தர் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. சித்தர் பாடல்களில் இறையைக் குறிப்பிட்டுரைக்கும் சொற்களில் வெளி, வெட்டவெளி என்னும் சொற்கள் மிகுதியும் இடம் பெறுவதைக் காணமுடிகிறது. இச்சொல் பொதுவாக அனைத்து சித்தர் பாடல்களிலும் வெளிப்படுவது தெரிகின்றது. இறையை இச்சொல்லாலேயே சித்தர்கள் வெளிப்படுத்தியும் இருக்கிறார்கள். அதுவே மெய்பொருள் என்றும் உரைக்கின்றனர்.

"வெட்ட வெளிதன்னை

மெய்யென்றிருப்போர்க்குப்

பட்டயமேதுக்கடி - குதும்பாய்

பட்டயமேதுக்கடி" (Ilangumaranar, 2002)

என்பது குதும்பைச் சித்தர் பாடல்,

"மெய்ஞானப் பாதையில் ஏறுசுத்த

வேதாந்த வெட்ட வெளியினைத் தேறு" (Ilangumaranar, 2002)

என்று வெட்ட வெளி என்னும் இறையை அடைய வேண்டும் என்றும் அதற்கான நெறியேமெய்ஞான நெறி என்றும் கடுவெளிச்சித்தர் பாடல் குறிப்பிடுகிறது. பட்டினத்தடிகள் பாடல்களில் வெட்டவெளியின் தன்மைகள் பலவாறு குறிப்பிடப்படுகின்றன,

"பூதங்களற்றுப்பொறியற்றுச்

சாரைம்புலன்களற்றுப்

பேதங்குணமற்றுப் பேராசை

தானற்றுப்பின்முனற்றுக்

காதங்கரணங்களு மற்ற ஆனந்தக் காட்சி" (Kalyanasundaram, 2001)

என்று பட்டினத்தார் பாடல் வெட்ட வெளியின் தன்மையைக் கூறுகின்றது. அவரின் அருட்புலம்பல் பகுதியில் இறைமையின் இயல்புகள் பலவாறு குறிப்பிடப்படுகின்றன. வாக்கும் மனமும் வடிவுமிலாவான் பொருள், அணுவுக்கும் மேருவுக்கும் அகப்புறமாய் நின்றான் காண், போக்கும் வரவுமில்லான் பொருவரிய பூரணன் என்பன வெல்லாம் பட்டினத்தார் பாடல்களில் வரும் சில வரிகள். பிரபஞ்சமே அழிந்தாலும் அழியாத தன்மைத்ததே இறைமை என்பதை பஞ்சப்பிரளயத்து மிஞ்சி யிருப்பாண்டி என்று பட்டினத்தாரின் பாடல் கூறுகிறது. இத்தகைய வெட்டவெளி இறையைச் சித்தர் பாடல்கள்பலவும்குறிப்பிடுகின்றன. மேலும் சித்தர் பாடல்கள் பல அமைந்துள்ள வடிவங்களும் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களும் பாமரமக்களும் விரும்பி ஏற்கும் வண்ணமும் புரிந்து கொள்ளும் விதமுமாகவே அமைந்துள்ளன.

## முடிவுரை

இறைவனைக் குறிக்கும் இறை இறையுடன் ஒன்றணைந்து வாழுவதைக் குறிக்கும் இறைநெறி என்னும் சொற்கள் தரும் விரிந்த பொருள் விளக்கி உரைக்கப்பட்டது. எங்கும் நிறைந்துள்ளது இறை, இறை இயக்கத்துடன் ஒன்றிணைந்து செல்லும் வாழ்வு இறைநெறி வாழ்வு என்று சித்தர்கள்

கூறுகிறார்கள். சித்தர் பாடல்கள் வெளிப்படுத்தும் இறையின் இயல்புகள், இறையுணர்வு பெறுதல், உடலுக்குள் இறையை உணர்தல், குண்டலினி, ஆதாரங்கள், இறையுணர் விற்கான வழிகள், பயிற்சி முறைகள் குருவின் அவசியம் மற்றும் இறையை உணர்வதில் உள்ள சமூகத்தடைகள் இவைகள் நேரடியாகவும் இறைபற்றி சமூகத்தில் நிலவும் தவறான கருத்துக்களை எதிர்ப்பதன் வழி எதிர்மறையாகவும் என இருவிதங்களில் வெளிப்படுகின்றன. இறையுணர்விற்கும் அறவாழ்விற்கும் மனத்தூய்மை அவசியம் என்பதைச் சித்தர் பாடல்கள உரைக்கின்றன. மனத்தூய்மையைத் தருவது தவமாகும். மனதையும் அறிவையும் கொண்டே இறையுணர்வு வெறும் வழிகள் சித்தர் பாடல்களில் அகவழிபாடாக உரைக்கப்பட்டுள்ளன. தவத்தின் பயனாக அறம் வெளிப்படுகிறது இறையுணர்வு பெற்று இறையோடு ஒன்றிணைந்திருக்கும் நிலையே சித்தர் நெறியின் உயரிய பேறாகக் கொள்ளப்படுகிறது. இவ்வகையில் சித்தர் பாடல்களில் இறையுணர்வு பெறுதலின் முக்கியத்துவம் சொல்லப்படுகிறது. அது தன்னைத் தான் அறிதல் என்றும் உள்ளுணர்வு பெறுதல் என்றும் சாகாக் கல்வி என்றும் சும்மா இருக்கும் நிலை என்னும் தூங்காமல் தூங்கும் சுகம் என்றும் மோனநிலை என்றும் சித்தர் பாடல்களில் உரைக்கப்பட்டுள்ளது. உடலைக் கோயிலாகச் சித்தர்கள் கருதுகின்றனர். உடல், உயிர், பூரண மூன்றும் ஒன்றாகவே சித்தர்களால் பார்க்கப்படுகிறது. புறவுடலுக்குள் இருக்கும் நுண்ணுடல் பற்றி சித்தர் பாடல்கள் மிகுதியாக பேசுகின்றன. உடலைப் புடம் போட்டு இறவாநிலை பெறுதலாகிய உண்மை நிலையை உணர்தல் சித்தர் பாடல்களில் தெளிவாக்குகின்றன.

## References


Ilangumaranar, (2002) Kudhambaisiddhar Paadalkal, South Indian Tamil Sangam, Chennai, India

Kalyanasundaram, T.V. (2001) Pattinathar Padalkal Uraiyudan, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India

Kamalakannan, (2000) Siddhar Thathuvam, Vanathi Pathippagam, Chennai, India

Manikkavasagam, R. (1998) Nam Nattu Siddharkal, Annai Abirami Arul, Chennai, India

Sami Sidambaranar, (2001) Siddharkal Kanda Vinnana Thathuvam, Senbaga Pathippagam, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License